# நொய்யல் நதி சார்ந்த குளங்களில் உயிர்ச்சூழல் பாதிப்பு

## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேதனை

■ கோவை

கோவையில் நகரமயமாதல் காரணமாக நொய்யல் நதி சார்ந்த குளங்களில், உயிர்ச்சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

உலகப் பறவைகள் இடம் பெயரும் தினத்தை முன்னிட்டு, கோவையில் மரம் அறக்கட்டளை, இந்திய ஆட்சிப்பணி மாணவர்கள், கோவை குளங்களை காப்போம் உள்ளிட்ட சுற்றுச்சூழல் அமைப்புகள் இணைந்து, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தின. அந்த அமைப்பினர் மற்றும் மாணவர்கள், நொய்யல் நதியை சார்ந்து கோவை மாவட்டத்தில் உள்ள 25 குளங்களின் உயிர்ச்சூழல் தன்மைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அதில் இனப் பெருக்கத்துக்காக இடம்பெயர்ந்து வந்துள்ள வெளிநாட்டு பறவைகள், குளங்களில் உள்ள பறவைகள், உயிரினங்கள் மற்றும் அவை வாழ்வதற்கான உகந்த சூழல் இருக்கிறதா என்பது குறித்தும் மாணவர்கள் ஆராய்ந்தனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி நொய்யல் நதி உற்பத்தியாகும் பகுதிகளில் உள்ள குளங்கள் மக்கள் பயன்பாட்டுக்கு உகந்தாகவும், மாசுபடாமல் இருக்கின்றன. ஆனால் நகரமயமாதல் காரணமாக நகரில் உள்ள குளங்களில் உயிர்ச்சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பதாக, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் வேதனை தெரிவித்தனர்.

மேலும் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும்




▲ பறவைகள் தினத்தை முன்னிட்டு, கோவையில் மரம் அறக்கட்டளை உள்ளிட்ட சுற்றுச்சூழல் அமைப்புகள் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

இடம் பெயர்ந்து வரும் பறவைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதோடு, குளங்களில் உயிரினங்கள் வாழ முடியாத சூழல் நிலவுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நொய்யல் நதி மற்றும் குளங்கள் ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கித் தவிக்கின்றன. ரசாயனம் மற்றும் கழிவு நீர் கலப்பினால் குளங்கள் வேகமாக அழிந்து வருகின்றன. பறவைகள் மற்றும் உயிரினங்களின் குறைவு, மனிதர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை என்பதை உணர்ந்து நொய்யல் நதியையும், குளங்களையும் மக்களுடன் இணைந்து பாதுகாக்க அரசு முன்வர வேண்டுமென, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.